பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

02 09 2025 7 15

செவ்வாய்க்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பஞ்சாப் மாநிலத்திற்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.
- தூய்மை இந்தியா மற்றும் ஜல்ஜீவன் இயக்கங்களால் நாட்டில் சுகாதார மேம்பாடு மற்றும் நீர்ப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் தெரிவித்துள்ளார்.
- சிங்கப்பூர் பிரதமர் திரு. Lawrence Wong மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.
- ஏர் இந்தியாவின் SATS நிறுவனத்திற்கு பாதுகாப்பு அனுமதியை சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் வழங்கியுள்ளது.
- உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டி அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்தியாவில் நடைபெற உள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பஞ்சாப் மாநிலத்தில் மழை வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து அம்மாநில முதலமைச்சருடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டறிந்தார்.

சீனாவில் இருந்து தாயகம் திரும்பியதும் பிரதமர், பஞ்சாப் முதலமைச்சர் திரு. பக்வந்த் மானை தொடர்பு கொண்டு பேசியதாகவும், அம்மாநிலத்திற்குத்

தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று பிரதமர் உறுதியளித்ததாகவும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

<<<<>>>>

ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் தூய்மை இந்தியா இயக்கம் மற்றும் ஜல்ஜீவன் இயக்கங்களால் நீடித்த சுகாதார சூழலும், நீர்ப் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய ஜல்சக்திதுறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று இந்த திட்டங்கள் தொடர்பான நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர், ஒருங்கிணைந்த முயற்சிகளின் காரணமாக சுகாதாரத்தில் நாடு முன்னேற்றத்தை எட்டியிருப்பதாக கூறினார்.

புதுமை கண்டுபிடிப்பு, கழிவுப் பொருட்களில் இருந்து எரிசக்தி உற்பத்தி போன்ற நடவடிக்கைகளால் பல்வேறு வளர்ச்சிகள் ஏற்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

கிராமப்புறங்களில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் ஜல்ஜீவன் இயக்கத்தின்கீழ் பாதுகாக்கப்பட்ட குடிநீர் குழாய்கள் மூலம் வழங்கப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

திறந்தவெளி கழிப்பறைகள் இல்லாத நிலையை ஏற்படுத்தியிருப்பது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி இருப்பதுடன் கிராமப்புற மக்களுக்கு மரியாதையை ஏற்படுத்தி இருப்பதாக திரு. சி.ஆர். பாட்டீல் கூறினார்.

<<<<>>>>

ஜப்பான் மற்றும் சீனாவில் அரசுமுறைப் பயணத்தை நிறைவு செய்த பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்றிரவு புதுதில்லி திரும்பினார்.

15வது இந்தியா-ஜப்பான் உச்சி மாநாட்டில் பிரதமர் பங்கேற்றதுடன், சீனாவின் Tianjin நகரில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சிமாநாட்டிலும் பங்கேற்றார்.

<<<<>>>>

எதிர்கால திட்டம், நம்பிக்கை மற்றும் புதுமைக் கண்டுபிடிப்புகளில் உலக அளவில் இந்தியா பல்வேறு மாற்றங்களை எதிர்கொண்டு வருவதாக மத்திய தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியாவில் சர்வதேச தொலைத்தொடர்பு சங்கம் ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கில் காணொலி மூலம் அவர் உரையாற்றினார்.

தொலைத்தொடர்புத் துறையில் இந்தியா பல்வேறு பரிமாணங்களுடன் வளர்ச்சியடைந்து வருவதாகவும் அவர் கூறினார்.

இந்தத் துறையில் உள்ள நிறுவனங்கள் டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் மக்களுக்கான கொள்கைகளை உருவாக்குவதுடன் குறைதீர் நடைமுறைகளையும் உருவாக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் நடைமுறையில் உள்ள ஆதார், ஜன்தன் திட்டம், பாரத் நெட், இந்தியா போஸ்ட் போன்ற முன்னோடி திட்டங்களையும் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

சிங்கப்பூர் பிரதமர் திரு. Lawrence Wong மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

அவரது இந்தப் பயணத்தின்போது இந்தியா-சிங்கப்பூர் இடையே திறன்மேம்பாடு, டிஜிட்டல் புரட்சி, விமானப் போக்குவரத்து, விண்வெளித் துறையில் ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளன.

பிரதமர் திரு. நரேந்திர மோடியை சிங்கப்பூர் பிரதமர் சந்தித்து இருதரப்பு பேச்சுகள் நடத்த உள்ளார்.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சிங்கப்பூருக்கு பிரதமர் மேற்கொண்ட பயணத்தின்போது மேற்கொள்ளப்பட்ட முடிவுகளின் தொடர்ச்சியாக இந்தப் பேச்சுவார்த்தை அமையும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவையும் சிங்கப்பூர் பிரதமர் சந்திக்க உள்ளார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர், கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் ஆகியோரும் சிங்கப்பூர் பிரதமரை சந்திக்க இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பிரதமரின் வளர்ச்சியடைந்த இந்தியா திட்டம் வேலைவாய்ப்பை உருவாக்கும் நோக்கத்தில் கொண்டுவரப்பட்டுள்ள முயற்சி என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இந்த திட்டம் குறித்த மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியாவின் கட்டுரையை பிரதமர் தனது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார்.

நாட்டின் பூகோள அடிப்படையில் வளர்ந்த இந்தியாவுக்கான வேலைவாய்ப்புத் திட்டத்தின் நோக்கங்களை பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்திட்டத்தின் மூலம் வரும் 2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை நோக்கிச் செல்லும் வகையில் முன்னேற்றம் ஏற்படும் என்று திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

ஏர் இந்தியாவின் SATS Airport Servicers நிறுவனத்திற்கு பாதுகாப்பு அனுமதியை சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் வழங்கியுள்ளது.

விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டிருப்பதால் இந்த நிறுவனத்திற்கு முதல் முறையாக பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், மலேசியாவுக்கு அடுத்தபடியாக சர்வதேச விமானப் போக்குவரத்து நிறுவனத்தின் ஒருங்கிணைந்த விதிமுறைகளை ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் நடைமுறைப்படுத்தும் இரண்டாவது நாடாக இந்தியா உருவாகியுள்ளது.

நாடு முழுவதும் விமானங்களை இயக்குவதில் பாதுகாப்பு மேலாண்மை நடைமுறைகளை வலுப்படுத்தும் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் உறுதிப்பாட்டிற்கு இந்த அனுமதி வழிவகுக்கும் என்று DGCA தெரிவித்துள்ளது.

**<<<<>>>>**

இந்தியா-அமெரிக்கா கூட்டு ராணுவப் பயிற்சியில் பங்கேற்பதற்காக இந்திய பாதுகாப்புப் படைக் குழுவினர் அலாஸ்கா சென்றடைந்தனர்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் 21வது ஆண்டாக இருநாட்டு ராணுவத்தினரும் கூட்டு ராணுவப் பயிற்சியில் ஈடுபட உள்ளதாக கூறியுள்ளார்.

வரும் 14ஆம் தேதி வரை இந்தப் பயிற்சி நடைபெறும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சியின்போது இருதரப்பிற்கும் பலனளிக்கக் கூடிய அதிநவீன உபகரணங்கள் மூலம் பயிற்சிகள் வழங்கப்படும் என்றும் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

**<<<<>>>>**

புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ள மணப்பாறை முறுக்கிற்கு தனி இலட்சினை வெளியிட மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

அதன்படி அங்கீகரிக்கப்பட்ட இலட்சினையை தஞ்சாவூரில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் சென்னை உயர்நீதிமன்ற அறிவுசார் சொத்துரிமை அரசு வழக்கறிஞர் திரு. சஞ்சய் காந்தி வெளியிட்டார்.

இதனால் மணப்பாறை முறுக்கு உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சியடைந்திருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

கர்நாடக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக ஒகேனக்கல் காவிரியாற்றுக்கு வரும் தண்ணீரின் அளவு அதிகரித்துள்ளதால் அருவிகளில் குளிப்பதற்கும், பரிசல் இயக்குவதற்கும் தொடர்ந்து தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஒகேனக்கல்லுக்கு இன்று காலை நிலவரப்படி வினாடிக்கு 43 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது.

இதன்மூலம் தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட சுற்றுவட்டாரப் பகுதிகளில் காவிரி கரையோர மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டிகள் அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்தியாவில் நடைபெற உள்ளன.

பாரீசில் நேற்று நடப்பாண்டிற்கான பாட்மிண்டன் சாம்பியன் போட்டி நிறைவு விழாவில் உலக பேட்மிண்டன் சம்மேளனம் இதனை அறிவித்தது.

இதன்மூலம் ஆசியாவில் 4 ஆண்டுகளுக்குப் பின்னரும், இந்தியாவில் 17 ஆண்டுகளுக்குப் பின்னரும் உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டிகள் நடைபெற உள்ளன.

<<<<>>>>

ஆசியக் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா 15-0 என்ற கோல் கணக்கில் கஜகஸ்தானை வென்றது.

பீஹார் மாநிலம் ராஜ்கிரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணியின் அபிஷேக் ஹாட்ரிக் கோல் அடித்தார்.

இந்தப் போட்டியில் இந்தியா ஏற்கனவே சூப்பர்-4 சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

<<<<>>>>

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி - நியூசிலாந்தின் மைக்கேல் வீனஸ் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-1, 7-5 என்ற செட் கணக்கில் ஈக்வடாரின் Gonzalo Escobar - மெக்சிகோவின் Reyes Varela இணையை வென்றது.

<<<<>>>>

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

Baoji நகரில் நடைபெற உள்ள இப்போட்டியில் இந்தியாவின் சார்பில் Tanya Hemanth, Ishita Negi, Jinpaul Sona உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

16 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை கூடைப்பந்துப் போட்டியில் இந்தியா இன்று பஹ்ரைனை எதிர்கொள்கிறது.

உல்லன்பட்டரில் இப்போட்டி காலை மணி 11.30க்கு தொடங்குகிறது.

<<<<>>>>

ஆஸ்திரியாவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-4, 6-2 என்ற செட் கணக்கில் குரேஷியாவின் Mili Polijicak-ஐ வென்றார்.

<<<<>>>>